கௌதம் பதிப்பகம்
எண் 2, சத்தியவதி நகர் முதல் தெரு, பாடி, சென்னை - 600 050.
தொலைபேசி : +91-94440-86888, 98947-62888, 90422-76544, 96888-29900
மின்னஞ்சல் : admin@gowthampathippagam.com Website : www.gowthampathippagam.com

# திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

# வேருக்கு நீர்

## 11

இம்மாதிரியான சந்தர்ப்பம் ஒன்று நேராமலிருந்தால் தான் அவள் நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருந்திருப்பாள். அவனுக்கு ஒன்றும் இது ஏமாற்றமாயிருந்திருக்காது. வழியில் கல் குவித்திருக்கிறது; மரத்தில் கனி இருக்கிறது; போகிற போக்கில் வீசி எறிந்து வைத்தால் போகிறது; அவ்வளவுதான். ஆனால், அவளுக்கு வீடு வந்து சேர்ந்த பிறகும் அந்தப் படபடப்பு அடங்கவில்லை. படபடப்புக்குக் காரணம் இந்துநாத்தின் நடப்பு மட்டுமல்ல. அன்றைய கூட்ட நிகழ்ச்சியே காரணம். தன்னால் சுதீரின் கேள்விகளுக்கு மறுமொழி கூற முடியவில்லை என்ற தோல்வி உணர்வுதான் குறுகுறுக்கிறது.

சுதீர் தன்னை விட அதிகமான கல்வி கேள்வியும் அநுபவமும் புத்தி சக்தியும் பெற்றவன் என்று அவளை அறியாமல் அவளுள் ஓர் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அது எப்படி ஏற்பட்டது?

அசைக்க முடியாத தன்னுடைய நம்பிக்கைகளை அவன் அசைப்பது போல் பலவீனத்துக்கு ஆளாகிறாள். அவனைக் காணும் போது அந்நாட்களில் ஏற்பட்டிருந்த வியப்பும், அவனைத் தோற்கடிக்க வந்த விளையாட்டுத் தோழன் என்ற உணர்வில் உருவானது போன்ற வீம்பும் இன்றளவும் அவளுக்கு மாறியிருக்கவில்லை.

வீம்பு. வீம்புக்குக் காரணம் பலவீனம் என்று தோன்றியதும் தன் மீதே வெட்கமும் வேதனையும் கோபமும் ஏற்படுகின்றன.

உண்மையில் சுதீர்தான் சுதந்திர வெளியிலே உருவானவன். அவளோ சட்ட திட்டங்களுள் வளர்ந்த பறவைதான். இளம் பருவத்தில் இயல்பாகத் தோன்றும் ஆசைகள் கிள்ளி எறியப்பட்டன. சின்னஞ் சிறுமியாக இருந்தபோது, வஜ்ரேசுவரி என்ற பெண் அணிந்திருந்த ஜிமிக்கியைப் பார்த்துவிட்டு அம்மானிடன் 'அதுபோல் எனக்கும் வேண்டும்' என்று கேட்டதுண்டு. நோட்டுப் புத்தகத்தில் அந்த ஜிமிக்கியைப் போல் வரைந்து வைத்திருக்கிறாள்; அம்மாவன் அவளுடைய ஆசையைக் கேட்டுச் சிரித்துவிட்டு, காந்தியடிகள் தென்னாட்டுக்கு வந்து ஹரிஜன நிதிக்குப் பெண்களிடம் பொன் நகைகளை வேண்டிய கதையைத் தொடங்கினார். கழற்றி ஒவ்வொன்றாக அந்தப் பெண் கொடுத்தாளாம். அவர் சிரித்துக் கொண்டே, "இனி மேல் மீண்டும் இத்தகைய அணிகளைப் பூணுவதில்லை என்று உறுதி மொழியும் தா!" என்று கேட்டாராம். அந்தப் பெண்ணின் தாய் குறுக்கிட்டு, "ஐயோ, அப்படியானால் என் மகளை மணந்து கொள்ள ஒருவரும் வரமாட்டாரே?" என்று வருந்தினாளாம். "அத்தகைய ஒருவன் வராவிட்டால் நான் மணந்து கொள்வதில்லை!" என்று சொன்னாளாம் அந்தப் பெண். அப்படிச் சொல்லக்கூடிய பெண் அந்தக் காலத்தில் இருந்திருப்பாளாக இருக்கும். இப்போது...?

செல்வச் செழிப்பில் பிறந்த சுதீர் இத்தகைய சட்ட திட்டங்களுள் குன்றியிருக்க மாட்டான். அந்தச் சுதந்திரம் தங்களுக்கே எதிராக அவனை உருவாக்கிய போதும் பெற்றவர் பொறுக்கிறார்கள். ஒருகால், அவள் தான் இத்தனை நாட்களும் ஒரு போலியான நம்பிக்கையில் தன்னை ஏமாற்றிக் கொண்டிருப்பதாக உணர்ந்து சுதீரின் வழியிலே திரும்பினால்...

தாய், தகப்பன்... அம்மாவன்... என்ன செய்வார்கள். பெரியப்பா அவள் வீடு திரும்பி வருகையில் படுக்கை போட்டுவிட்டார்.

"ஏம்மா இத்தனை நேரம்? ஃபோன் பண்ணியிருக்கக் கூடாது? பெரியப்பா நீ தனியாகப் போகவில்லைன்னு நிம்மதியாகப் படுத்து விட்டார்னாலும் எனக்குக் கவலையாக இருந்தது. கார் உள்ளே வரலியா?" என்று கேட்கிறாள் சின்னம்மா.

"எதிர்பாராமல் நேரமாயிட்டது..."

குற்ற உணர்வுடன் தட்டை வைத்துக் கொண்டு மேசையின் முன் அமர்கிறாள்.

"நீ போன பிறகு உன்னைத் தேடிண்டு ஒரு பையன் வந்தான். கறுப்பா, ஒல்லியா அங்கே ஆசிரமத்திலேருந்து வந்தேன்னான். இங்கே இன்டர்வ்யூ எதற்கோ வந்தானாம்..."

"யாரு?..."

"எனக்குத் தெரியலே. பெரியப்பா வாசலில் நிறுத்திப் பேசினார். ஏழரை மணி வரையிலும் காத்திருந்தான். பெரியப்பா பலகாரம் பண்றச்சே மணி எட்டேகாலாயிட்டது..."

"ஆசிரமத்திலேருந்தா! ஓ! யார், துரையா?"

"பேரெல்லாம் தெரியாது..."

"ஒண்ணுமே பேசலியா! அட பாவமே? திரும்பிப் போயிட்டாரா?"

"நாளைக்குக் காலையில் வரேன்னு சொன்னான் போலிருக்கு. பெரியப்பா சேவா நிலையத்துக்குக் கூட போன் பண்ணாப்பல. நீ அங்கே வரவேயில்லேன்னு சொன்னாராம் ரங்கநாயகி..."

பச்சை மிளகாயை நறுக்கென்று கடித்து விட்டாள்.

மடக் மடக்கென்று தண்ணீரைக் குடித்துவிட்டு மாடிக்கு வருகிறாள். நீருவின் அறையில் விளக்கெரிகிறது.

மரக்கட்டிலில் தன் சமுக்காளப் படுக்கையை விரித்துக் கொள்கையில், நீரு படித்துக் கொண்டிருக்கும் சினிமாப் பத்திரிகையை விட்டெறிந்து விட்டு, "ஹே, என்ன பிக்சருக்குப் போனீங்க!" என்று கேட்கிறாள், குறுநகையுடன்.

"பிக்சரா?"

"சும்மா சொல்லு, உன் ரகசியத்தை நான் ஒண்ணும் வெளியே விட்டுடமாட்டேன்!"

"என்ன இரகசியம்?"

"ஏய்... தாத்தா ஒரு பந்தலிலேயே இரண்டு கல்யாணத்தையும் சேர்த்து நடத்திட்டா செலவு குறையும்னு சந்தோஷப்படுவார். என்னிடம் எதற்கு மறைக்கிறாய், கள்ளி?"

இப்போதுதான் யமுனாவுக்குப் புரிகிறது. 'ஆஹாஹா?'வென்று சிரித்துத்தான் எரிச்சலை விழுங்கிக் கொள்ள வேண்டும்.

"ஏய்... எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நினைக்க வேண்டாம். நீ சேவா நிலையம் போறேன்னு புளுகறதும் அவர் கண் ஜாடை காட்டி வண்டியிலே ஏத்திக்கிட்டுப் போறதும்..."

"சும்மா இரு நீரு! பேத்தாதே!"

"என்ன படம்னு மட்டும் சொல்லிடு. 'லவ் அண்ட் ஹவ் டு மேக் இட்'டா?"

"உளறாதே! அவன் எங்கேயோ போனான். நான் எங்கேயோ போனேன்."

"ஆஹாஹா...! 'லவ்'னு சொல்லிட்டா நாக்கை எச்சிலை முழுங்கிக் கழுவிக் கொள்ளலாம். பரவாயில்லை சொல்லி விடு!"

"நீரு, அது கிடக்கட்டும், யாரோ சாயங்காலம் என்னைத் தேடி வந்திருந்தாராமே!"

"யாரோ, உங்க ஆசிரமத்து மலைஜாதிபோல இருந்தது. தாத்தா அவனை நிறுத்திக் குலம் கோத்திரம் விசாரித்தார். அவன் தண்ணீர் குடித்த டம்ளரைப் பெருந்தேவியைக் கொண்டு அலம்பி வைக்கச் சொன்னார். ஏண்டி விஷயத்தை மறைச்சு மழுப்பறே? இப்ப சொல்லு! லவ் அண்ட் ஹவ் டு மேக் இட் தானே?" பொதுவுடைமைக் கோட்பாடுள்ள நாட்டில் சந்தேகிக்கப்படும் நபர்கள் ஏதேனும் குற்றத்தை, அவர்கள் சொல்கிறபடி ஒப்புக் கொள்ளும் வரை சித்திரவதை செய்வார்களாம். இவள் அந்த வகையைச் சேர்ந்தவள்.

"நீ அதை தான் போய்ப் பார்த்தேன் என்றால் தான் விடுவாய், கிடக்கட்டும். வந்தவர் பெயர் துரை என்று சொன்னாரா?"

"துரையா? - ஹையோ? என்ன பெயரடி...?" என்று அவள் விழுந்து விழுந்து சிரிக்கிறாள். யமுனாவுக்கு வேதனையாக இருக்கிறது. பரிதாபமாக அவளைப் பார்க்கிறாள். நீரு அந்தச்

சினிமாவைப் பற்றியே சொல்லிச் சொல்லிக் கண்களை மூட வொட்டாமல் அடிக்கிறாள்.

காலையில் கீழே அவள் தலையைக் கண்டதும் பெரியப்பா முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு வருகிறார். இதற்குள் தினமும் குளிக்கப் போயிருப்பாரே?

"ராத்திரி எத்தனை மணிக்கு வந்தே?"

வளைவு நெளிவில்லாமல் மொட்டையாக ஒரு கத்தி வீச்சுக் கேள்வி.

"பத்தரையாகி விட்டது?"

"அவ்வளவு நேரமா? சினிமாவுக்குப் போறதானால் ஒழுங்காய்ச் சொல்லிக் கொண்டு போவது தானே? எதற்கு இந்த ஆஷாடபூதி வேஷம்?"

"அப்படியெல்லாமில்லை. சினிமாவுக்கு யார் போனா?" என்றாள் தலையைக் குனிந்து கொண்டு.

"சரி, எங்கே போனாலும் சொல்லிக் கொண்டு போகணும். இல்லை, பொழுதோடு திரும்பணும். எனக்கு எதுவும் ஸ்ட்ரெய்ட் ஃபார்வர்டாக இருக்கணும். இந்த கச்சாபிச்சாவெல்லாம் பிடிக்காது."

"நேற்றுக் கொஞ்சம் நேரமாகி விட்டது. எதிர்பார்க்கவில்லை; தப்புதான்."

"அப்ப, இந்தக் கல்யாணத்துடன் முகூர்த்தம் பார்த்து விடலாமா?"

முகத்தில் அவளுக்கு ஜிவ்வென்று கடுமை ஏறுகிறது.

"எதற்கு?"

"எதற்கா? என்னிடம் நீருவிடம் பேசறாப்போல என்ன கேள்வி? எத்தனை நேரம் கழிச்சு வந்தாலும் கவலை இல்லையே?"

"நீங்கள் நினைக்கிறது முழுத் தப்பு. இந்த எண்ணம் உங்களுக்கு வரும்படி நடந்து கொண்டிருந்தால் அதற்காக வருந்துகிறேன்."

பெரியப்பாவுக்கு ஆத்திரம் வந்து விடுகிறது. "என்ன? உனக்குத்தான் பேசத் தெரியும்னு நினைப்பா?"

"மன்னிக்கணும் பெரியப்பா, கல்யாணத்தைப் பற்றிய நினைப்பே கொஞ்சமும் கிடையாது."

"பின்னே? அந்த நினைப்பில்லாமலா அவனுடன் ஊர் சுத்தப் போறே? அந்தச் சமாசாரமெல்லாம் என் கண்முன் இந்த வீட்டில் நடக்க விடமாட்டேன்!"

"நீங்கள் ஏன் தப்பாக நினைக்கிறீர்கள்? நான் ஊர் சுத்தப் போகவில்லை. உண்மையில் அவன் தான் என் சுதந்திரத்தில் தவறாகக் குறுக்கிடுகிறான். நான் மதிப்புக் கொடுத்ததே பிசகு என்று தோன்றுகிறது."

"ஓ! இப்ப இப்படித் திருப்பிக் கொள்கிறாயாக்கும். ஏன், அவனுக்கென்ன? இந்தக் காலத்தில் இந்தச் சாமர்த்தியம் தான் வேண்டியிருக்கு. எம்.ஏ.யும் எம்.எஸ்.ஸியும் யாருக்கு வேணும்? பெரிய பெரிய அரசியல் தலையெல்லாம் சிநேகம். நீ வாணா பாரு. நாளைக்குக் கல்யாணம்னா சென்ட்ரல் மினிஸ்டர் வரை அழைச்சிடுவான். உக்காந்து சாப்பிட இரண்டு வீடு இருக்கு. அம்மா

பரம சாது, அவன் இஷ்டப்பட்டால் பட்டதுதான். மாட்டுப்பெண் நல்ல சாதியில்லே குலமில்லேன்னு சொல்ல மாட்டாள். இப்ப பாலிடிக்ஸ் போற போக்கைப் பார்த்தா, இந்தப் பயல் நாளைக்கே மந்திரியாக வந்தால் ஆச்சரியப்பட மாட்டேன். உனக்குப் பிடிக்கிறதாடான்னேன். பதிலே சொல்லாம சிரிச்சிட்டுப் போனான். இவனை விட உனக்கு எங்கேருந்து பெரிய கொம்பன் வரப் போறான்னு இவனைக் குறை சொல்றே?"

"..."

"ஒண்ணு வச்சுக்கோ! ஜாதகக்கட்டைத் தூக்கிட்டு எந்தப் பக்கம் போனாலும், 'அம்மா யாரு? அப்பா யாரு?'ன்னு விசாரிக்காம பேசமாட்டா. பெரிய பெரிய சீர்திருத்தவாதிப் பட்டம் வச்சிண்டிருக்கிறவாதான் தூண்டித் தூண்டிக் கேக்கறா! இவனும் நீ என்னமோ பாலிடிக்ஸில் இறங்கினால் துணையாயிருப்பேன்னு தான் சரிங்கறான். இல்லாட்டா இன்னித் தேதியில் பத்தாயிரம் வரதட்சிணையுடன் அவனுக்குப் பெண் கொடுக்கக் காத்திருக்கா. பையன் சுண்டினால் ரத்தம் தெறிக்கும் சிவப்பு. ராஜா போல் இருக்கிறான். உனக்கு என்ன ஆட்சேபணை?"

"...எனக்கு அதெல்லாம் சொல்லத் தெரியாது. நான் கல்யாணம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. ஊருக்குப் போவதாகத் தீர்மானம் செய்துவிட்டேன்."

"என்னது?"

அவருக்கு உதடுகள் துடிக்கின்றன. அடிக்க வந்துவிடுவார் போலிருக்கிறது. அவள் அழுத்தமாகவே, "எனக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணமே கிடையாது. நான் ஏதோ நினைத்துக் கொண்டு வந்தேன். ஊருக்குப் போகிறேன்" என்று கூறுகிறாள்.

"என்ன நினைச்சு வந்தே?"

"பாத யாத்திரையில் கலந்து கொள்ளலாம்னு இருந்தேன். இங்கே இப்படி இலட்சியப் பிரசாரம் பண்ணலாம்னு அப்பா சொன்னார்; வந்தேன்..."

"இந்தச் சுரைக்காயெல்லாம் சோறு போடுமா? லட்சியமாவது மண்ணாங்கட்டி? வயசுப் பெண்ணைத் தனியே தண்ணீரைத் தெளிச்சி அவன் அனுப்புவது. உங்கம்மா சோத்து மூட்டைக் கட்டிக் கொடுத்து நீ வரதா; நான்சென்ஸ்! உலகம் பெண் குழந்தையைத் துணையில்லாம அனுப்பறவா யாருன்னு காத்திண்டிருக்கு. நீ தறிகெட்டுப் போகக் கூடாது. ஒரு தக்க துணையோடு போகணும்னு நான் சொல்றேன். நீ ஊருக்குப் போகக் கூடாது!"

அவளுக்கு என்ன மறுமொழி கூறுவதென்றே தெரியவில்லை.

அப்போது "சார்!" என்ற குரல் கேட்டது.

யமுனாவுக்குத் துணுக்கென்றிருக்கிறது.

துரை... தோளில் ஒரு பையை மாட்டிக் கொண்டு...

அவளைக் கண்டதும் அவனுடைய முகம் மலருகிறது.

அப்போதுதான் புன்னகை செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாற் போல் அவள் முகம் பளிச்சென்று மலருகிறது.

"நேத்து நீங்க வந்தீங்களாம். இப்பதான் சொன்னாங்க..."

"ஆமாம் ஒரு இண்டர்வ்யூன்னு வந்தேன். செலக்ஷன் ஆயிட்டது. மாச முதல்ல 'ஆர்டர்' வந்திடுன்னாங்க. உங்ககிட்ட இந்த சந்தோஷமான சமாசாரம் சொல்லணும்னு வந்தேன்."

"ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது எனக்கும். இங்கேயே வேலையா?"

"இல்லே, கல்கத்தாவுக்குப் போக வேண்டும். கொஞ்ச நாள் மூணு மாசமோ என்னமோ டிரெயினிங் போல. இப்ப நானூறு ரூபாய் சம்பளமும் அலவன்சும் தருகிறார்களாம். இது போதாதா?"

"அதிகம்..."

பெரியப்பா வாயில்படியில் வந்து நிற்கிறார்.

சில விநாடிகள் வந்த காரியம் முடிந்துவிட்டாற் போல் அந்தப் புன்னகையுடனே நிற்கிறான்.

அவளுக்கும் என்ன கேட்பதென்று தெரியவில்லை.

சட்டென்று, "எங்கே தங்கியிருக்கிறீர்கள்?" என்று விசாரிக்கிறாள்.

"ஒரு நண்பன் வீட்டில்..."

"எல்லோரும் அங்கு சுகந்தானே?"

"ஜோசஃப் சார் பாதயாத்திரை முடிந்து வந்துவிட்டார். ஐயா தான் ரொம்பப் பலவீனமாய்விட்டார். பேசறதேயில்லை. நீங்க இங்கே வந்த பிறகு பிரார்த்தனைக்குக் கூட எழுந்து உட்காருவதில்லை. ஏதானும் சிகிச்சை பண்ணலாமென்றால் ஒத்துக்

கொள்ளவே மாட்டேனென்கிறார். அம்மாதான் பாவம்; இப்போதெல்லாம் வெளியே காண முடிவதேயில்லை."

"அவருக்கு நம்பிக்கையே போய்விட்ட மாதிரி இருக்கிறது. அதை எப்படிக் கொடுப்பதென்று தான் எனக்கும் புரியவில்லை - நீங்கள் எத்தனை நாள் தங்குவீர்கள் இங்கே?"

இந்நேரமும் அவனை நிற்க வைத்தே பேசுகிறாள். அவனை உட்காருங்கள் என்று பெரியப்பாவும் கூடச் சொல்லவில்லையே!

"அதுதான் சங்கடம். இன்னும் ஒரு வாரத்தில் உத்தரவு வருமென்றால் இப்போது அங்கு ஒருதரம் வீணுக்கு வண்டிச் செலவு செய்வானேன் என்று தோன்றுகிறது. உங்களிடம் சொல்வதற்கென்ன? ஜோசஃப் சார் தான் பணம் கொடுத்திருக்கிறார். இங்கு வந்த பிறகுதான் கல்கத்தாவுக்குப் போகவேண்டும் என்று தெரிகிறது. இங்கே உத்தரவு வரும் வரையில் அங்கே இங்கே தங்கிக் கொண்டு பணத்தைச் செலவழிப்பதற்கு, ஊருக்கே போய் விடலாமென்று தோன்றுகிறது. நீங்கள் எத்தனை நாள் தங்குவீர்கள் இங்கே...? எல்லாம் எப்படி இருக்கிறது? 'விவரமாக அவளிடம் கேட்டு வாருங்கள்' என்று அம்மா சொன்னார்..."

யமுனா எங்கோ சூனியத்தைப் பார்த்துக் கொண்டு நெடுமூச்செறிகிறாள்.

"எதுவும் உற்சாகத்தைக் கொடுக்கும்படியாக இல்லை. ஆனால் நாம், அதை எதிர்பார்த்தா வந்தோம்? இருந்தாலும் இப்போது அப்பாவைப் பற்றிக் கேட்ட பிறகு எனக்கு உடனே திரும்பிவிட வேண்டும் போலிருக்கிறது..."

"நீங்கள் அதற்காக அவசரப்பட்டு முடிவு பண்ண வேண்டாம்..."

பெரியப்பாவைப் பார்க்கிறான் அவன்.

பெரியப்பா சடக்கென்று உள்ளே திரும்பிப் போகிறார்.

சில விநாடிகள் முகம் இருள அவர் சென்ற திக்கையே நோக்கிக் கொண்டு அவள் நிற்கிறாள்.

"நீங்கள் தப்பாக நினைக்கக்கூடாது; கொஞ்சங்கூட மாற்றமே ஏற்படவில்லை..."

"நான் புரிந்து கொண்டேன். அப்ப, நீங்களும் வருவதானால், போய் டிக்கெட் வாங்கி இடம் போடட்டுமா?"

"செய்யுங்கள். எனக்கு மனசு ரொம்பக் குழப்பமா இருக்கிறது. உங்களை நிக்க வைத்தே பேசுகிறேனே? உட்காருங்கள்..." என்று வராந்தாவில் உள்ள பிரம்பு நாற்காலியைக் காட்டுகிறாள்.

"பரவாயில்லை. நான் நாளை மாலையே இடம் கிடைத்தால் வாங்கி விடட்டுமா? தூங்க வசதி கிடைக்காது."

"ஆமாம். இப்போதைக்கு எனக்கு ஒரு வேலையும் இங்கு இல்லை; நான் வந்து விடுகிறேன்."

"சரி அப்ப நான் நாளை மாலை இங்கு வருகிறேன். டிக்கெட் கிடைத்து விட்டால், இல்லையேல்..."

"போன் நம்பர் தருகிறேனே, சொல்லி விடுங்கள் போதும்..."

தொலைபேசி எண்ணைச் சிறு தாளில் குறித்துக் கொடுக்கிறாள். அவன் அதை வாங்கிக் கொண்டு விடை பெற்றாலும், யமுனா அவனுடன் இறங்கி நடக்கிறாள். மாமரங்கள் மழைக்குச் செந்தளிர்

அணிந்து பூரித்திருக்கின்றன. தரையில் ஈரம் காயவில்லை. எங்கேயோ, ஒரு குயில், 'கூவ்' 'கூவ்' என்று குரல் கொடுக்கிறது. துரை முன்னே செல்கையில் மௌனமாக நடக்கும் யமுனாவுக்கு அவன் அருந்துவதற்குக் கூட ஏதேனும் தந்து உபசரிக்கவில்லையே என்று உறுத்துகிறது. அதை எப்படிச் சொல்வது என்று புரியாமலே நடக்கையில் அவனுடைய பைக்குள்ளிருந்து ஒரு புத்தகம் தலை நீட்டி எட்டிப் பார்க்கிறது.

"அதென்ன... புத்தகமா..."

துரை திரும்பி நிற்கிறான். "ஓ இதுவா? பழைய 'இம்பிரின்ட்' பிளாட்ஃபாரத்தில் நேற்று வாங்கினேன்" என்று அவளிடம் எடுத்துக் கொடுக்கிறான். 'எக்ஸ் அன்டச்சபிள்ஸ்' (மாஜி தீண்டாதோர்) என்ற தலைப்பு அவள் கருத்தைக் கவ்விக் கொள்கிறது. தன்னையுமறியாமல் அவள் கண்கள் அவனைச் சந்திக்கின்றன. "ஆமாம், இந்தத் தலைப்பைப் பார்த்து விட்டுத்தான் இரண்டு மாசப் புத்தகங்களையும் வாங்கினேன்..."

"அமெரிக்கர் எழுதியதா?"

"ஆமாம். நேற்று இங்கு வருமுன் ஒரே மூச்சில் படித்தேன். அப்புறந்தான் வந்தேன். தீண்டாதோர், மாஜி தீண்டாதோர் என்ற பெயரில் ஒரு புதிய சாதியைத் தோற்றுவித்திருக்கின்றனர். சரிதானே?"

அவனுடைய புன்னகையில் சிறுமையின் நிழல் தெரிகிறது.

"எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. பெரியப்பா நேற்றும் இப்படித்தான் உங்களை நிற்கவைத்து அனுப்பினாரா?"

"அதெல்லாமில்லை. மலைச்சாதியா என்று கேட்டார். இல்லையென்று சொன்னதும், 'இன்டர்வ்யூவுக்கு வந்தேன், வேலையில்லாத இன்ஜினியரிங் பட்டதாரி' என்றதும் உட்காரச் சொன்னார். பிறகு தான் படித்தது, வளர்ந்தது எல்லாம் கேட்டார். நான் தக்கர் பாபா வித்யாலயம், அங்கே இங்கே என்று சொன்னதும் சந்தேகம் வந்து விட்டது. நான் அழுத்தமாகவே பின் தங்கிய வகுப்பு என்று சொன்னேன். குடிக்கத் தண்ணீர் கேட்டேன். ஒரு அம்மாள் கொண்டு வந்து வைத்தார். உண்மையில் நீங்கள் இங்கே இருப்பீர்கள். இரவுக்கு தங்கிவிடலாம் என்று தான் பையோடு வந்தேன்... பேசாமல் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, ரயில்வே ஸ்டேஷனில் படுத்துத் தூங்கினேன். காலையில் எழுந்து காப்பி குடித்துவிட்டு வந்தேன். நீங்கள் எந்த இடத்தில் வந்து முட்டிக் கொள்கிறீர்கள் என்று புலனாயிற்று."

அவளுடைய கண்களில் நீர் சுரந்து விட்டது.

"நீங்கள் எதற்கு வருத்தப் படுகிறீர்கள்? எங்களை இப்போது ஓட்டலில் ஏற்கிறார்கள்; குடிக்க நீர் கொடுக்கிறார்கள். படித்தோம்; சமுதாயத்தில் மதிப்பாக வாழ முடியும். ஆனால் வாழ்க்கை என்று ஒரு தனிமனிதனின் தேவைகளோடு ஆராய்ந்தால் எங்கள் நிலை என்ன? என் போன்றவர்களுக்குக் குப்பைச் சகதியில் வேர்; அதை விட்டுப் பெயர்ந்து விட்டோம்; மேல்படிகளில் நாங்கள் ஊன்ற யார் இடம் கொடுப்பார்கள்? அலுவலகத்தில் இடம் கிடைத்திருப்பதே பெரிய காரியம். உங்களைத் தவறாக நினைப்பதாகக் கருதக் கூடாது. மாற்றங்கள் இயல்பாக வருவதில்லை" என்றான்.

"வரும்; வந்து விடும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மறுமலர்ச்சி பெற்ற பெண்கள் எத்தனையோ பேர்! ஒரு புதிய சமுதாயம் தோன்றக் கூடும்..."

"நம்பிக்கையில் தான் உலகமே இன்று பிழைத்திருக்கிறது யமுனா. அதைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் நான் இன்றும் வந்திருக்கிறேன். பெரியவரிடம் சிரித்துக் குசலம் விசாரித்ததும் அதனால் தான்..."

"நீங்கள் எவ்வளவு பெருந்தன்மையுடையவர்!"

"அப்படியெல்லாம் புகழ வேண்டாம். இப்படி எண்ணுவதற்கு என்னை உருவாக்கியவர்களுக்கு நான், என்றென்றும் நன்றி செலுத்திக் கொண்டிருப்பேன். நீங்களெல்லாம்... உங்கள் பெற்றோர், அவர்களைப் போன்ற பெரியவர்கள் இந்த உலகில் இன்னும் வாழ்கிறார்கள் என்பதே நம்பிக்கை. நேரமாகிவிட்டது யமுனா. நான் டிக்கெட்டைப் போய்ப் பார்க்கிறேன்; வருகிறேன்."

"ஓ, டிக்கெட்டுக்குப் பணம் கொண்டு வருகிறேன். சற்று இருங்கள்..."

"என்னிடம் இருக்கிறது யமுனா. நாளை பார்க்கலாம்."

அவன் சுற்றுக் கதவைக் கடந்து கண்களுக்கு மறையும் வரையிலும் யமுனா அங்கேயே நிற்கிறாள்.

*****

Gowtham Web Services
Our Websites: www.chennailibrary.com, www.samaiyalarai.com, www.tamilthiraiulagam.com, www.inbasutrula.com, www.siruvarulagam.com, www.chennainetwork.com, www.kovainetwork.com, www.madurainetwork.com, www.trichynetwork.com, www.nellainetwork.com, www.salemnetwork.in, www.indiainfolibrary.com, www.wowcricket.com, www.gowthampathippagam.com